செய்தி - மக்கள் தொடர்புத் துறை சார்பில் கட்டப்பட்ட

ரூ.7.85 கோடி மதிப்பிலான சிலைகள் - மணி மண்டபங்கள்!

முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்!

சென்னை, பிப்.29-

செய்தி மக்கள் தொடர்புத் துறை சார்பில் ரூ.7.85 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள தமிழறிஞர் டாக்டர் மு.வரதராசனார் திருவுருவச் சிலையுடன் கூடிய குவிமாட அரங்கம், தியாகி அண்ணல் தங்கோ திருவுருவச் சிலை, இரட்டைமலை சீனிவாசன் திருவுருவச் சிலையுடன் கூடிய நினைவு மண்டபம், பேரரசர் பெரும்பிடுகு முத்தரையர் மணிமண்டபம், சர்.ஏ.டி.பன்னீர்செல்வம் மணிமண்டபம் மற்றும் எம்.கே.தியாகராஜ பாகவதர் மணிமண்டபம், வீரன் சுந்தரலிங்கம் மணிமண்டபத்தில் குதிரையில் அமர்ந்து போர்புரிவது போன்று கம்பீர தோற்றத்துடன் கூடிய புதிய சிலையை தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்தார்.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 27.2.2024 அன்று தலைமைச் செயலகத்தில், செய்தி மக்கள் தொடர்புத் துறை சார்பில் 7 கோடியே 85 இலட்சத்து 16 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள தமிழறிஞர் டாக்டர் மு.வரதராசனார் அவர்களுக்கு திருவுருவச் சிலையுடன் கூடிய குவிமாட அரங்கம், தியாகி அண்ணல் தங்கோ அவர்களுக்கு திருவுருவச் சிலை, இரட்டைமலை சீனிவாசன் அவர்களின் திருவுருவச் சிலையுடன் கூடிய நினைவு மண்டபம், பேரரசர் பெரும்பிடுகு முத்தரையர் மணிமண்டபம், சர்.ஏ.டி.பன்னீர்செல்வம் மணிமண்டபம் மற்றும் எம்.கே.தியாகராஜ பாகவதர் மணிமண்டபம், வீரன் சுந்தரலிங்கம் மணிமண்டபத்தில் குதிரையில் அமர்ந்து போர்புரிவது போன்று கம்பீரத் தோற்றத்துடன் கூடிய புதிய சிலை ஆகியவற்றை திறந்து வைத்தார்.

தமிழ்நாட்டின் புகழ்சால் பெருந்தகையாளர்கள், தமிழ்மொழியின் வளர்ச்சிக்கு அரும்பாடுபட்டு தமிழ்நாட்டிற்குப் பெருமைத் தேடித்தந்த அறிஞர் பெருமக்கள், சமூகநீதி, விடுதலை உணர்வுகளை ஊட்டிவளர்த்த கவிஞர்கள், இசை மேதைகள், தமிழ்நாட்டின் தியாக வரலாற்றுக்கு உன்னத சாட்சியங்களாக விளங்கும் தியாகிகள், மேதைகள் மற்றும் அறிஞர்களின் நினைவுகளைப் போற்றிப் பெருமைப்படுத்தும் வகையிலும், தமிழ் சமுதாயத்திற்கு அவர்களின் பங்களிப்பைப் பெருமைப்படுத்தும் வகையிலும், செய்தி மக்கள் தொடர்புத் துறையின் சார்பில் நினைவகங்கள், திருவுருவச் சிலைகள், அரங்கங்கள், நினைவுத் தூண்கள், நினைவுச் சின்னங்கள் ஆகியவை அமைக்கப்பட்டு, சிறந்த முறையில் பராமரிக்கப்பட்டு, பாதுகாக்கப்பட்டு வருகின்றன.

தமிழறிஞர் டாக்டர் மு.வரதராசனார் அவர்களுக்கு திருவுருவச் சிலையுடன் கூடிய குவிமாட அரங்கம்

2021-22ஆம் ஆண்டிற்கான செய்தி மக்கள் தொடர்புத் துறையின் மானியக் கோரிக்கையில், இருபதாம் நூற்றாண்டின் புகழ்பெற்ற தமிழறிஞர்களில் ஒருவரும், பல்வேறு இலக்கியக் கட்டுரைகள், ஆராய்ச்சி நூல்கள், புதினங்கள் மற்றும் சிறுகதைகள் ஆகியவற்றைத் தமிழில் படைத்து, மதுரை காமராஜர் பல்கலைக்கழகத் துணைவேந்தராகப் பணியாற்றிய பன்முக ஆற்றல் கொண்ட தமிழறிஞர் டாக்டர் மு.வரதராசனார் அவர்களுக்கு இராணிப்பேட்டை மாவட்டத்தில் திருவுருவச் சிலை அமைக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

அதன்படி, இராணிப்பேட்டை நகரத்தில் 65 இலட்சத்து 76 ஆயிரம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள தமிழறிஞர் டாக்டர் மு.வரதராசனார் திருவுருவச் சிலையுடன் கூடிய குவிமாட அரங்கத்தை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

தியாகி அண்ணல் தங்கோ அவர்களுக்கு திருவுருவச் சிலை

2023-24ஆம் ஆண்டிற்கான செய்தி மக்கள் தொடர்புத் துறை மானியக் கோரிக்கையில், தமிழ் மொழி மீது தீராத பற்று கொண்டு, வடமொழிப் பெயர்களைத் தமிழ்ப்படுத்தியும், கள்ளுக்கடை மறியல், வைக்கம், சைமன் குழு எதிர்ப்பு, உப்புச் சத்தியாகிரகம் மற்றும் நீல் சிலை சத்தியாகிரகம் ஆகிய போராட்டங்களில் கலந்து கொண்டு சிறைத் தண்டனை பெற்று மடிந்த அண்ணல் தங்கோ அவர்களுக்கு திருவுருவச் சிலை அமைக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

அதன்படி, வேலூர் மாவட்டம், குடியாத்தம், மேல்ஆத்தூர் சாலை அருகில் உள்ள நகராட்சிக்கு சொந்தமான நேரு பூங்காவில் 50 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள தியாகி அண்ணல் தங்கோ திருவுருவச் சிலையை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

இரட்டைமலை சீனிவாசன் அவர்களின் திருவுருவச் சிலையுடன் கூடிய நினைவு மண்டபம்

இரட்டைமலை சீனிவாசன் அவர்கள் இனப் போராளியாகவும், வழக்கறிஞராகவும், பத்திரிகையாளராகவும் தன்னுடைய வாழ்க்கையைத் தொடங்கினார். தன் இன மக்கள் அனுபவிக்கும் வேதனைகளிலிருந்து அவர்களை விடுவிக்க பாடுபடுவதை தன்னுடைய வாழ்நாள் இலட்சியம் எனத் தீர்மானித்துத் தொண்டாற்றினார். இவர் 1891-ஆம் ஆண்டு "பறையர் மகாஜன சபை" என்ற ஓர் அமைப்பைத் தோற்றுவித்தார். பின்னர் இந்த அமைப்பு "ஆதிதிராவிட மகாஜன சபை" என்று அழைக்கப்பட்டது. இச்சபை மூலம் ஆதிதிராவிட மக்கள் சமுதாய முன்னேற்றம் அடைய பாடுபட்டார். பின்னர் 1893-ஆம் ஆண்டு "பறையன்" என்ற பத்திரிகையைத் தொடங்கினார். ஆதிதிராவிட இன முன்னேற்றத்திற்காக இப்பத்திரிகையில் தொடர்ந்து எழுச்சியூட்டக் கூடிய கட்டுரைகளை எழுதினார். 1923-ஆம் ஆண்டில் சென்னை மாநிலத்தின் மேல்சபை உறுப்பினராக நியமிக்கப்பட்டார். இவருக்கு ராவ்சாகிப், திவான்பகதூர், திராவிடமணி போன்ற பட்டங்கள் அளிக்கப்பட்டன.

அண்ணல் காந்தியடிகளுக்கு மோ.க.காந்தி என்று தமிழில் கையெழுத்து போடுவதற்குக் காரணமாக இருந்தவர் இரட்டைமலை சீனிவாசன் அவர்கள் தான். இரட்டைமலை சீனிவாசன் அவர்கள் 1930-ஆம் ஆண்டு இலண்டனில் நடைபெற்ற வட்டமேசை மாநாட்டில் தாழ்த்தப்பட்டோர் சார்பில் தலைவர் அண்ணல் அம்பேத்கர் அவர்களுடன் கலந்து கொண்டார். அண்ணல் காந்தியடிகளால் தொடங்கப்பட்ட தீண்டத் தகாதோர் ஊழியர் சங்கத்தில் உறுப்பினராக இருந்தார்.

1939ஆம் ஆண்டு அண்ணல் அம்பேத்கர் அவர்களுடன் சென்னை மாகாண தாழ்த்தப்பட்டோர் கூட்டமைப்பைத் தொடங்கினார். தன்னுடைய வாழ்க்கையை ஆதி திராவிட மக்களுக்காக அர்ப்பணித்த இரட்டைமலை சீனிவாசன் அவர்கள் 1945ஆம் ஆண்டு தன்னுடைய 85-வது வயதில் மறைவெய்தினார்.

ஆதிதிராவிட மக்கள் முன்னேற்றத்திற்காக தன் வாழ்க்கையை அர்ப்பணித்த இரட்டைமலை சீனிவாசன் அவர்களுக்கு செங்கல்பட்டு மாவட்டம், மதுராந்தகம் வட்டம், அச்சரப்பாக்கத்தில் 2 கோடியே 17 இலட்சத்து 74 ஆயிரம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள திருவுருவச் சிலையுடன் கூடிய இரட்டைமலை சீனிவாசன் நினைவு மண்டபத்தை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

திருச்சிராப்பள்ளியில் அமைக்கப்பட்டுள்ள பேரரசர் பெரும்பிடுகு முத்தரையர் மணிமண்டபம், சர்.ஏ.டி.பன்னீர்செல்வம் மணிமண்டபம் மற்றும் எம்.கே.தியாகராஜ பாகவதர் மணிமண்டபம்

பேரரசர் பெரும்பிடுகு முத்தரையர் அவர்களுக்கு திருச்சிராப்பள்ளியில் 1 கோடியே 48 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள திருவுருவச் சிலையுடன் கூடிய மணிமண்டபம் மற்றும் நூலகம்;

நீதிக்கட்சியின் வைரத் தூண் என்று அழைக்கப்பட்ட சர்.ஏ.டி.பன்னீர்செல்வம் அவர்களுக்கு திருச்சிராப்பள்ளியில் 77 இலட்சத்து 62 ஆயிரம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள திருவுருவச் சிலையுடன் கூடிய மணிமண்டபம்;

திரைப்படத் துறையிலும், பாரம்பரிய இசைத் துறையிலும் எம்.கே.தியாகராஜ பாகவதர் அவர்களின் பன்முக பங்களிப்பினையும் சாதனைகளையும் அங்கீகரிக்கும் வகையிலும் அவரது நினைவை போற்றும் வகையில் 79 இலட்சத்து 39 ஆயிரம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள எம்.கே.தியாகராஜ பாகவதர் திருவுருவச் சிலையுடன் கூடிய மணிமண்டபம்;

இம்மூன்று மணிமண்டபங்கள் அமைந்துள்ள வளாகத்தில் 98 இலட்சம் ரூபாய் செலவில் மேற்கொள்ளப்பட்டுள்ள அணுகு சாலை, சுற்றுச்சுவர் உள்ளிட்ட அத்தியாவசியப் பணிகள், என மொத்தம் 4 கோடியே 3 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள மூன்று மணிமண்டபங்களை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

வீரன் சுந்தரலிங்கம் மணிமண்டபத்தில் நிறுவப்பட்டுள்ள குதிரையில் அமர்ந்து போர்புரிவது போன்று கம்பீரத் தோற்றத்துடன் கூடிய புதிய சிலை

தூத்துக்குடி மாவட்டம், கவர்னகிரியில் அமைந்துள்ள வீரன் சுந்தரலிங்கம் மணிமண்டபத்தில் ஏற்கனவே நிறுவப்பட்டுள்ள மார்பளவுச் சிலையை மாற்றி, 48 இலட்சத்து 66 ஆயிரம் ரூபாய் செலவில் வீரன் சுந்தரலிங்கம் அவர்கள் குதிரையில் அமர்ந்து போர்புரிவது போன்று கம்பீர தோற்றத்துடன் கூடிய புதிய சிலையை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

இந்நிகழ்ச்சியில், நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன், மீன்வளம் - மீனவர் நலத்துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், கைத்தறி, துணிநூல் மற்றும் கதர்த் துறை அமைச்சர் ஆர். காந்தி, தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் முனைவர் இல. சுப்பிரமணியன், செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் டாக்டர் இரா.வைத்திநாதன், தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர் முனைவர் ந.அருள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

காணொலிக் காட்சி வாயிலாக திருச்சிராப்பள்ளி மாவட்டத்திலிருந்து நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, கூட்டுறவுத் துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன், பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, சுற்றுச்சூழல் மற்றும் கால நிலை மாற்றத் துறை அமைச்சர் சிவ.வீ. மெய்யநாதன், சட்டமன்ற உறுப்பினர்கள் எஸ்.கதிரவன், என்.தியாகராஜன், எம்.பழனியாண்டி, எஸ்.ஸ்டாலின் குமார், அ.சௌந்தரபாண்டியன், மாவட்ட ஆட்சித் தலைவர் எம்.பிரதீப் குமார், திருச்சி ராப்பள்ளி மாநகராட்சி மேயர் மு.அன்பழகன், மாநகராட்சி ஆணையர் வெ.சரவணன், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்களும்;

செங்கல்பட்டு மாவட்டத்திலிருந்து சட்டமன்ற உறுப்பினர் எம்.பாபு, மாவட்ட ஆட்சித் தலைவர் ச.அருண்ராஜ், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்களும் கலந்து கொண்டனர்.

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில் துறைமுகம் சட்டமன்ற தொகுதி நாட்டுப் பிள்ளையார் கோயில் தெருவில் 250 குடியிருப்பு காவலாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் மற்றும் உதவி தொகையினை வட்டச் செயலாளர் அண்ணாதுரை தலைமையில் அமைச்சர்கள் எஸ் எஸ் சிவசங்கர். பி கே சேகர்பாபு, மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன் ஆகியோர் கலந்து கொண்டு நலத்திட்ட உதவிகளை வழங்கினர். உடன் தேர்தல் பொறுப்பாளர் பிரபு. எஸ் முரளி. எம் விஜயகுமார். ஜி எம் தேவன். மண்டல குழு தலைவர் ஸ்ரீராமுலு. கவுன்சிலர் ராஜேஷ் ஜெயின். கே ஆர் அபரஞ்சி. டி எஸ் சேகர். நான் ரஞ்சித் விஜயாலயன் பூக்கடை வெங்கடேசன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

பெருங்களத்தூர் எஸ்.சேகர் தலைமை! பெருங்களத்தூர் தெற்கு பகுதி தி.மு.க. சார்பில்

தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்த நாள் - 1000 பேருக்கு நல உதவிகள்!

அமைச்சர் தா.மோ.அன்பரசன் வழங்குகிறார்! எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ. - மேயர் வசந்தகுமாரி பங்கேற்பு!

சென்னை, பிப். 29 -

காஞ்சி வடக்கு மாவட்டம் தாம்பரம் மாநகராட்சி பெருங்களத்தூர் தெற்கு பகுதி தி.மு.க. சார்பில் மார்ச் 1ல் பிறந்தநாள் காணும் கழக தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் 71வது பிறந்தநாள் விழாவை முன்னிட்டு 1000பேருக்கு நலத்திட்ட உதவிகள், கழகப் பணி மனை, பத்மாவதி கல்யாண மண்டபம், அம்பேத்கர் மேடை, அன்னை அஞ்சுகம் நகர், காமராஜர் நெடுஞ்சாலை, முத்துமாரி அம்மன் கோயில் ஆகிய இடங்களில் அறுசுவை உணவு - பிரியாணி வழங்கும் விழா 1.3.2024 வெள்ளிக்கிழமை மதியம் 12.00 மணியளவில் நடைபெறுகிறது.

மேலும் சாரதா சக்தி பீடத்தில் உள்ள மாணவர்களுக்கும், பவுச்சியம் தீபம் மனவளர்ச்சி குன்றிய வர்களுக்கும் அறுவை உணவு வழங்கப்படுகிறது.

இவ்விழாவிற்கு பெருங்களத்தூர் தெற்கு பகுதி செயலாளரும் தாம்பரம் மாநகராட்சி மாமன்ற தி.மு.க.குழுத் தலைவருமான பெருங்களத்தூர் எஸ்.சேகர் எம்.சி. தலைமை வகிக்கிறார்.

நிகழ்ச்சிக்கு பி.புகழேந்தி எம்.சி., வ.க.ரவிச்சந்திரன், கே. சாமுண்டீஸ்வரி, ஜெ. மணிவண்ணன், எஸ்.கமலா சேகர்.எம்.சி., எஸ்.மதுமிதா மதன் எம்.சி., எஸ்.ராஜேஸ்வரி சங்கர் எம்.சி., டி.ஜெயதுரை, ஜெ.குப்புசாமி, எஸ். சிவக்குமார், வி.யோபு ஆகியோர் வரவேற்புரையாற்றுகின்றனர்.

க.குருநாதன், பி.சுரேஷ், எஸ்.ஐசக், கே.வெங்கடேசன், ஆர்.சஞ்சீவி, ஆர்.மஞ்சுநாதன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இவ்விழாவில் காஞ்சி வடக்கு மாவட்டக் கழகச் செயலாளரும் அமைச்சருமான தா.மோ.அன்பரசன் கலந்துகொண்டு கழகக் கொடியேற்றி நலத்திட்ட உதவிகள் வழங்கி, அறுசுவை பிரியாணி வழங்கி சிறப்பிக்கிறார்.

மேலும் இவ்விழாவில் தாம்பரம் மாநகரச் செயலாளர் எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ., தாம்பரம் மாநகர மேயர் வசந்தகுமாரி, துணை மேயர் ஜி.காமராஜ், டி.கமராஜ் எம்.சி., மு.ஆதிமாறன், லயன் எஸ்.சங்கர் மற்றும் வார்டுக் கழகச் செயலாளர்கள், அனைத்து அணிகளின் நிர்வாகிகள், கழக மூத்த முன்னோடிகள், கழகத் தோழர்கள் பலர் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

நிறைவாக மாநகரப் பிரதிநிதி கே.சுந்தர் நன்றி கூறுகிறார்.

பொருளாதார வளர்ச்சியடைந்த மாநிலமாக

தமிழ்நாட்டை மாற்றிடும் முயற்சிக்கு முதல்வருக்கு பாராட்டு!

கவிஞர் காசி முத்துமாணிக்கம் தலைமையில் நடைபெற்ற வர்த்தகர் அணி நிர்வாகிகள் கூட்டத்தில் தீர்மானம்!

சென்னை, பிப். 29-

தமிழ்நாட்டை பொருளாதார வளர்ச்சியடைந்த மாநிலமாக மாற்றிட முயற்சிக்கும் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு கழக வர்த்தக அணி பாராட்டுத் தெரிவித்துள்ளது.

தி.மு.க வர்த்தகர் அணி மாநில மாவட்ட நிர்வாகிகள் கூட்டம் தி.மு.க தலைமை நிலையம் அறிவாலயத்தில் உள்ள கலைஞர் அரங்கத்தில் நடைபெற்றது.

கூட்டத்திற்கு தி.மு.க வர்த்தகர் அணி செயலாளர் கவிஞர் காசி முத்துமாணிக்கம் தலைமை வகித்தார். மாநில இணை செயலர் திண்டுக்கல் V.ஜெயன் வரகூர் பெரியசாமி, சங்கரன் கோவில் முத்து செல்வி நாகர் கோவில் தாமரை பாரதி பாண்டிசெல்வன் மற்றும் மாவட்ட அமைப்பாளர்கள் கோவை மாரிசெல்வன். விஜயராஜ் சென்னை மேற்கு, சென்னை தென் மேற்கு மயிலை பாலு, சென்னை வடக்கு மாவட்டம் அமைப்பாளர் லயன் வி.தியாகராஜன், கோவை சந்தீப் ராஜா ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கூட்டத்தில் நீலகிரி மாவட்ட அமைப்பாளர் உறமத்துல்லா, விழுப்புரம் வெங்கடேசன், சேலம் கிழக்கு மணிவேல், திருச்சி மேற்கு மாநகரம் எஸ்.வி.ஆர்.வரதராஜன், வேலூர் மாவட்டம் ஆர்.ஜி.தர்மராஜ், எம்.சிவசுப்ரமணியன் திருப்பூர் வடக்கு, பண்ருட்டி குணா (எ) குணசேகரன் கன்னியாகுமரி செல்வன், பிரகாஷ் இராயபுரம் சென்னை வடக்கு மாவட்டம், கிருஷ்ணகிரி சிவசங்கர், சேலம் மத்திய மாவட்டம் செல்வி மெஸ் பழநிசாமி, ஜி. அருள் கும்பகோணம் தஞ்சை வடக்கு எஸ்.ஜி. ராஜன் தலைவர், தஞ்சை வடக்கு மாவட்டம் ஆர்.முருகன் வடக்கு மாவட்டம் தஞ்சை அமைப்பாளர் துரைபாண்டி திருப்பூர் வடக்கு ரமணன் புதுவை மாநில அமைப்பாளர், கோவை வடக்கு வேல்சாமி கோவை தெற்கு கண்ணன், நெல்லை மாநகர் சேக்தாவூது, தென்காசி முத்துகுமார் மாவட்டம் அமைப்பாளர், சேத்துப்பட்டு செல்வராஜ் திருவண்ணாமலை மாவட்டம், மணி விஜயன் கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டம் அமைப்பாளர், எஸ்.டி.ஆர்.எஸ்.பாபு திருவண்ணாமலை தெற்கு மாவட்டம் அமைப்பாளர், மனோகரன் கரூர் மாவட்டம் அமைப்பாளர், ஓ.எஸ். தினகரன் காஞ்சி வடக்கு மாவட்டம் அமைப்பாளர், கே.என். தமிழ் செழியன், இராமநாதபுரம் மாவட்டம் அமைப்பாளர், நா. தமிழ்மணி, சென்னை கிழக்கு மாவட்டம் அமைப்பாளர், திருப்பத்தூர் மாவட்டம் ஆம்பூர் மோகன், கடலூர் மாவட்ட தலைவர் ரங்கநாதன், தாம்பரம் சிப்ஸ்மணி. செல்வகுமார், நாமக்கல் மாவட்டம் அமைப்பாளர், இரா,சிவகுமார் மற்றும் துணை அமைப்பாளர்கள் உட்பட கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:

தி.மு.க.வில் மாணவர் அணி. இளைஞர் அணி, வர்த்தகர் அணி உட்பிரிவு போல பா.ஜ.க.வில் சி.பி.ஐ. அமலாக்கத்துறை, வருமானவரித்துறை, என செயல்படும் ஆகியவற்றின் தவறான செயல்களை கண்டிக்கிறோம்.

வேலியே பயிரை மேய்வது போல, இமையே விழியை குத்தியது போல தேர்தல் அதிகாரியே வாக்கு சீட்டில் கிறுக்கி செல்லாது என சொல்லியவரை கண்டிபிடித்து ஆம்ஆத்மி, காங்கிரஸ் கூட்டணியே வென்றதாக உச்சநீதி மன்றம் சொன்னபிறகும் குற்றவாளிகளை காப்பாத்தும் பா.ஜ.க. அரசை இம்மாமன்றம் வன்மையாக கண்டிக்கிறது.

கிளாம்பாக்கத்தில் உள்ள அரசு பேருந்து நிலையத்துக்கு தலைவர் பெயரைச் சூட்டிய தளபதிக்கு இம்மாமன்றம் நன்றி கூறுவதுடன் அதே நேரத்தில் முன்பு பாரிசில் அரசு பேருந்துகளும் எழும்பூரிலிருந்து ஆம்னி பேருந்துகளும் ஓடியது கோயம்பேட்டுக்கு பேருந்துகள் மாறினாலும் நிற்பது கோயம்பேட்டில் ஆனால் புறப்படும்போது எழும்பூர் சென்று வாடிக்கையாளர்களை ஏற்றிக் கொண்டு மவுண்ட் சைதாபேட்டை கிண்டி. ஏர்போர்ட் என தேனாம்பேட்டை செல்லும். அதே போல் வரும்போது கிண்டி சென்று சைதாபேட்டை தேனாம்பேட்டை தி. நகர், எழும்பூர் என செல்லும்,

அதே போல் பேருந்துகள் கிளாம்பாக்கத்திலிருந்து புறப்பட்டாலும் கிண்டி, அசோக் நகர், வடபழனி சென்று கோயம்பேடு பின் கிளாம்பாக்கம் என்று மாற்றி வியாபாரிகளையும் பெண்களையும்

கழகத்தின் முன்னோடி கயல் தினகரன், தலமைக் கழக துணை மேலாளர் ஜெய்குமார், தலமை நிலை செயலர்கு க. செல்வம் மறைந்ததற்காக இம்மாமன்றம் தனது வருத்தத்தை தெரிவித்துக் கொள்கிறது.

எள் அளவு எள் முனையளவு முனையின் மூக்கலிவு கூட மத்தியிலிருந்து நிதி தராதபோதும் தமிழக அரசின் சார்பில் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு தலா 6000 வீதம் வழங்கியதுடன். திமுக கழக நிர்வாகிகள் மூலம் அரிசி, பருப்பு, பால் பிரட் வழங்கி மக்களை மரணப்பிடியிலிருந்து காப்பாற்றிய கற்பக விருட்சமாம் தளபதிக்கு இம்மாமன்றம் நன்றி கூறுகிறது.

சட்டமன்றத்தில் தமிழ்த் தாய் வாழ்த்தை அவமானப் படுத்திய கவர்னரை கண்டிக்கிறோம். தேளை எத்தனை முறை காற்றினாலும் முனி வரை கொட்டியது போலதளபதி எவ்வளவு பெருந்தன்மையாக நடந்துகொண்டாலும் சென்னா ரெட்டியை ஜெ' அவமானப்படுத்தியது போல் அல்லாமல் பெருந்தன்மையாக நடந்து கொண்டாலும் ஆளுநர் ரவியே மேலும் மேலும் தவறாக அரசியலமைப்புச்சட்டம் வகுத்த வழியின் படி

நடக்காமல் எதேச்சிதிகாரத்துடன் செயல்பட்டு வரும் கவர்னர் ரவியினை கண்டிக்கிறோம்.

34 வது வட்ட பகுதிப் பிரதிநிதி

ஆ.போத்தி இல்ல மணவிழா வரவேற்பு!

சென்னை, பிப். 29 -

சென்னை வடக்கு மாவட்டம் பெரம்பூர் வடக்கு பகுதி 34 வது வட்ட பகுதி பிரதிநிதி ஆ.போத்தி இல்ல திருமண வரவேற்பு விழா இன்று மாலை 6.00 மணிக்கு முத்தமிழ் நகர் கொடுங்கையூரில் உள்ள இராமசாமி மஹாலில் நடைபெறுகிறது.

திருமண வரவேற்பு விழாவில் சென்னை வடக்கு மாவட்ட பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ. முன்னிலையில் அன்பில் மகேஸ் பொய்யாமொழி (பள்ளி கல்வி துறை அமைச்சர்) பி.கே.சேகர்பாபு (இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்) தலைமையேற்று மணமக்களை வாழ்த்துகின்றனர்.

இதில் கலாநிதி வீராசாமி எம்.பி., இராயபுரம் சட்டமன்ற உறுப்பினர் ஐட்ரீம் ஆர்.மூர்த்தி, எபிநேசர் எம்.எல்.ஏ. ஆகியோரும் மணமக்களை வாழ்த்துகின்றனர். நிகழ்வில் அ.முருகன், கா.ஜெயராமன், இரா.கருணாநிதி, இரா.நரேந்திரன், எஸ்.ஆர்.கமலகண்ணன், வி.தயாளன், ஏ.தமிழ்செல்வன், பா.மதிவாணன், டி.கமலகண்ணன், க.அமுல், ஏ.ஆர்.ஆர்.மலைச்சாமி, சர்பஜெயாதாஸ், க.சர்மிளாகாந்தி, சி.ஆனந்தி, வட்ட கழக செயலாளர்கள் கே.வி.இராஜன், மு.உமாபதி, என்.கார்திகேயன், இரா.அரிதாஸ், கே.இ.செந்தமிழ்ழரசு, சி.எஸ்.ரவி, எஸ்.டி.சேகர்வர்மா, என். நந்தகோபால், எஸ்.அருண் சக்ரவர்த்தி, எம்.சரவணன், இ.சையத்அலிகான், த.யுவநாதன், ஆர்.பி.சத்யேந்திரன், பல.முத்தரசன், எஸ். சுமதி, கே.ராஜகோபால், டி.குமரேசன், கி.தினகரன், இ.யூசுப் பங்கேற்று சிறப்பிக்கி ன்றனர்

நன்றியுரை பி.பூமிநாதன்.

வட்டச் செயலாளர் சைதை மு.இராஜா தலைமையில்

சைதை 169வது "அ" வட்டத்தில் முதல்வர் பிறந்த நாள்!

மு.மகேஷ்குமார் - இரா.துரைராஜ் உணவு வழங்குகின்றனர்

சென்னை, பிப். 29 -

கழகத் தலைவர் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பிறந்த நாள் நிகழ்ச்சி அமைச்சரும் மாவட்டச் செயலாளருமான மா.சுப்பிரமணியன் அறிவுத்தலின்படி. 01.03.2024, வெள்ளிக்கிழமை அன்று 10.00 மணியளவில் காந்திபுரத்தில் தொடங்கி சுப்புபிள்ளை தோட்டம், அப்பாவு நகர், மசூதி தோட்டம், மாடல் அட்மன்ட் ரோடு, பேன் பேட்டை, தாடாண்டர் நகர், அரசு பண்ணை மற்றும் ஜோதியம்மாள் நகர் ஆகிய பகுதிகளில் கழக இரு வண்ணக் கொடி ஏற்றி, இனிப்புகள் வழங்கி, அறுசுவை உணவு வழங்கப்படுகிறது.

இதில் பெருநகர சென்னை மாநகராட்சி துணை மேயர்

சைதை மு.மகேஷ்குமார், பகுதிச் செயலாளர் மண்டல குழு தலைவர்

இரா.துரைராஜ் ஆகியோர் அறுசுவை உணவு வழங்குகின்றனர்.

எனவே 169வது (அ) வட்டத்திற்கு உட்பட்ட பொதுக் குழு உறுப்பினர்கள், பகுதி கழக நிர்வாகிகள், மாவட்ட பிரதிநிதிகள், வட்ட கழக நிர்வாகிகள், பகுதி பிரதிநிதிகள், மாவட்ட, பகுதி, வட்ட அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள் இளைஞர் அணி , தகவல் தொழில் நுட்ப அணி, மகளிரணியினர் மாணவர் அணியினர், தொண்டர் அணியினர் , வட்ட செயற்குழு உறுப்பினர்கள் மற்றும் கழக முன்னோடிகள் அனைவரும் கலந்து கொண்டு நிகழ்ச்சியை சிறப்பிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு வட்டச் செயலாளர் சைதை மு.இராஜா கேட்டுக்கொண்டுள்ளார்.

திருவொற்றியூர் சட்டமன்றத் தொகுதி பாக முகவர்கள் கூட்டம் மாவட்ட அவைத் தலைவர் குறிஞ்சி எஸ்.கணேசன் தலைமையில் பகுதிச் செயலாளர் மண்டலக்குழுத் தலைவர் தி.மு.தனியரசு ஏற்பாட்டில் நடைபெற்றது. இதில் மாவட்டக் கழகச் செயலாளர் மாதவரம் எஸ். சுதர்சனம் எம்.எல்.ஏ. கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். இக்கூட்டத்தில் தொகுதி பொறுப்பாளர் சி.தசரதன், டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி., கே.பி.சங்கர் எம்.எல்.ஏ. ஆகியோர் ஆலோசனை வழங்கினர். இதில் ஏ.வி.ஆறுமுகம், வை.ம.அருள்தாசன், ஆர்.எஸ். சம்பத், எம்.வி.குமார், கே.பிரபாவதி, ஆர்.குமரேசன், ந.திருசங்கு உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

தி.மு.க வர்த்தகர் அணி மாநில மாவட்ட நிர்வாகிகள் கூட்டம் தி.மு.க தலைமை நிலையம் அறிவாலயத்தில் உள்ள கலைஞர் அரங்கத்தில் நடைபெற்றது. கூட்டத்திற்கு தி.மு.க வர்த்தகர் அணி செயலாளர் கவிஞர் காசி முத்துமாணிக்கம் தலைமை வகித்து பேசினார். இதில் மாநில,மாவட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.